# எழுதிப் பழகுவோம்!

**கொடுக்கப்பட்ட சொற்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைத்தல்.**

## 1. பாடு

1. பாரதியார் கவிதைகளை பாடலாகப் பாடு.
2. எங்கள் பள்ளி மாணவர்கள் நன்றாகப் பாடினார்கள்.
3. முறையாகப் பயிற்சி மேற்கொண்டால் நன்றாகப் பாடலாம்.

## 2. விளையாடு

1. நான் கபடி விளையாடினேன்.
2. விளையாடுவது உடலுக்கு ஆரோக்கியமாகும்.
3. பள்ளி விடுமுறையில் மாணவர்கள் கணினியில் விளையாடுவார்கள்.

## 3. தூங்கு

1. பகலில் தூங்குவது எனக்குப் பிடிக்காது.
2. நான் என் பாட்டியுடன் தூங்குவேன்.
3. மனிதர்களுக்குத் தூக்கம் அவசியம்.

## 4. தோட்டம்

1. பூந்தோட்டம் மிகவும் அழகானது.
2. தோட்டத்திற்கு சென்று காய்கறிகள் பறித்தேன்.
3. வீட்டில் தோட்டம் வைத்தால் நல்ல பலனைப் பெறலாம்.

## 5. பட்டாசு

1. நான் தீபாவளி அன்று பட்டாசு வெடிப்பேன்.
2. பட்டாசுகளில் பல வகைகள் உள்ளன.
3. பட்டாசினைக் கவனமாக வெடிக்க வேண்டும்.